**29.07.2022**

**OS.No. 416/2019 PW : 1,** திரு. லோகநாதன்

**வாதி தரப்பில் அனுமதியுடன் செய்யப்படும் முதல் விசாரணை தொடர்ச்சி...**

11.07.1980 தேதியிட்ட பதிவு கிரைய ஆவணத்தின் நகல் வா.சா.ஆ.38.

12.04.1983 தேதியிட்ட பதிவு கிரைய ஆவணத்தின் நகல் வா.சா.ஆ.39.

15.02.1995 தேதியிட்ட பதிவு கிரைய ஆவணத்தின் நகல் வா.சா.ஆ.40.

பிராதுபடி தீர்ப்பாகவேண்டுகிறேன்.

5ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டது.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை...**

திருத்தணி தான் என்னுடைய பூர்வீகம் ஆகும். சர்வே எண் 60/7ஏ எங்களுக்கு சொந்தமானது என்று இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும் என்று பரிகாரம் கோரியிருக்கிறேன். சர்வே எண் 60/3ல் 1200 சதுர அடி அளவுள்ள சொத்தை என் தந்தை 1ம் பிரதிவாதியின் கணவருக்கு 01.07.1980ல் கிரையம் கொடுத்தார். என் தந்தை கடந்த 12.04.1980ல் 1200 சதுர அடி அளவுள்ள சொத்தை அதே சர்வே எண்ணில் 1ம் பிரதிவாதியின் கணவருக்கு கிரையம் கொடுத்தார். அவ்விதம் கிரையம் கொடுத்த பின்னர் நான் 1ம் பிரதிவாதியின் கணவர் மீது அ.வ.எண் 573/1989 நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்தேன். அந்த வழக்கில் சர்வே எண் 60/3-ஐ சொத்துவிவரத்தில் குறிப்பிட்டிருந்தேன். 1ம் பிரதிவாதியின் கணவரான

S GANAPATHISAMY Digitally signed by S GANAPATHISAMY

கோவிந்தசாமி பிள்ளை என்மீது அ.வ.எண் 606/1989 என்ற ஒரு வழக்கை விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்தார். அந்த இரண்டு வழக்குகளும் ஒன்றாக விசாரிக்கப்பட்டு நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. கோவிந்தசாமி தாக்கல் செய்த வழக்கு அனுமதிக்கப்பட்டது. அந்த தீர்ப்பை எதிர்த்து ஏ.ஸ்.117 மற்றும் 118/2001 என்று மேல்முறையீடு செய்தேன். அந்த இரண்டு மேல்முறையீடுகளும் தள்ளுபடி செய்யப்பட்டது. அதற்கு மேல் நான் இரண்டாம் மேல்முறையீடு செய்யவில்லை.

S GANAPATHISAMY

Digitally signed by S GANAPATHISAMY

I Additional District and Sessions Judge,
Tiruvallur.